

விழுப்புரம் மாவட்டம் மயிலம் ஊராட்சி ஒன்றியம் மயிலத்தில் நடைபெற்ற அரசு விழாவில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் 238 பயனாளிகளுக்கு வீடுகள் கட்டுவதற்கான உத்தரவு ஆணைகளை வழங்கினார்.உடன் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரவி ,ராமதாஸ், துணை சேர்மன் புனித ராமஜெயம் உள்ளனர்.

# போதைப் பொருள் ஒழிப்பு தின உறுதிமொழி ஏற்பு!

முதல் பக்கத் தொடர்ச்சி

மொழி ஏற்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து காவல் துறை மூலமாக போதைப் பொருட்களை கண்டறிந்து ஒழித்திட தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மாநிலமெங்கும் விழிப்பு ணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இவற்றைத் தொடர்ந்து 2023 ஆம் ஆண்டிலும் ஆகஸ்டு 11 அன்று “போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு” விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் உறுதி மொழி ஏற்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்களின் நோக்கத்தினை அடைந்திட தமிழ்நாடு காவல்துறை மற்றும் அமலாக்கப் பணியகம், குற்றப் புலனாய்வு துறை ஆகியவை போதைப்பொருட்கள் மற்றும் மனமயக்கப் பொருட்களின் சட்ட விரோத விற்பனை மற்றும் கடத்தலுக்கு எதிராக தொடர்ந்து கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. கடந்த ஆண்டில் இது தொடர்பாக மொத்தம் 10,256 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அவற்றில் 14,770 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து சுமார் 23,364 கிலோ கஞ்சா, 0.953 கிலோ ஹெராயின், 39,910 மாத்திரைகள் மற்றும் 1239 கிலோ மற்ற போதைப் பொருட்கள் (கஞ்சா சாக்லேட், மெத்தாபிடமைன், ஆம்பிடாமைன் மற்றும் மெத்தாகுலான்) கைப்பற்றப் பட்டுள்ளது,

நடப்பு 2024 ஆண்டில், ஜூன் மாதம் வரை மொத்தம் 4,522 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 7,123 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன் விளைவாக 11,081 கிலோ கஞ்சா, 74,016 மாத்திரைகள் மற்றும் 283.70 கிலோ மற்ற போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், போதைப்பொருள் விற்பனை மற்றும் கடத்தலில் ஈடுபட்டு லாபம் பெற்ற குற்றவாளிகளுக்கு எதிராக நீதி விசாரணை நடத்தப்பட்டு, அவர்களின் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் சட்ட விதிகளின் கீழ் பறிமுதல் செய்யப் பட்டு வருகின்றது. கடந்த 11.08.2022 முதல் இதுவரை 76 போதைப்பொருள் வழக்குகளில் சம்மந்தப்பட்ட 154 குற்றவாளிகளுக்கு எதிராக நீதிவிசாரணை மேற்கொள்ளப்பட்டு, அவர்களின் 45 எண்ணிக்கையிலான சுமார் ரூ.18.15 கோடி மதிப்புடைய அசையும் / அசையா சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளது. மேலும், போதைப் பொருள் மற்றும் உளவெறி ஊட்டும் பொருட்கள் சட்ட (NDPS) வழக்குகளில் தொடர்புடைய குற்றவாளிகளின் சுமார் 5 இலட்சம் ரூபாய் இருப்பு கொண்ட 8800 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன.

கடுமையான சட்ட நடிவடிக்கை மட்டுமல்லாமல், “தேவை குறைப்பு” என்ற இலக்கை அடைவதற்காக, போதைப்பொருள் பழக்கத்திற்கு எதிராக இளைஞர்கள், குறிப்பாக பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த தமிழ்நாடு அமலாக்கப் பணியகம், குற்றப் புலனாய்வு பிரிவு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் முதன்மைத் திட்டமான ‘Drive Against Drugs’ கீழ் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகள் மற்றும் மக்கள் கூடும் வணிக வளாகங்கள், விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் இடங்கள், திருவிழாக்கள் ஆகிய இடங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப் பட்டு வருகின்றது. கடந்த 2023 ஆம் ஆண்டில், சுமார் 30 லட்சம் மக்கள் கலந்து கொண்ட மொத்தம் 1,10,603 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப் பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 2024 ஜூன் வரை, சுமார் 8.20 லட்சம் பொதுமக்கள் கலந்து கொண்ட சுமார் 23,350 விழிப்புணர்வு நிகழ்ச்சி கள் நடத்தப்பட்டுள்ளன.

**முதலமைச்சர் அவர்கள் தலைமையில் போதைப்பொருள் ஒழிப்பு உறுதி மொழி ஏற்கப்பட்டது.**

போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக, தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் தொழில் முறை கல்லூரிகளில் மாணவ, மாணவியருக்கு போதைப் பொருள் எதிர்ப்பு உறுதிமொழி நடத்த திட்டமிடப்பட்டது, அதன்படி, சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், இன்றைய தினம் **போதைப் பொருள் ஒழிப்பு உறுதிமொழி யினை** சுமார் 1500 கல்லூரி மாணவ, மாணவியர்கள் ஏற்றுக் கொண்டனர்.

**NARCO ஒருங்கிணைப்புக் கூட்டங்கள்!**

கடந்த மே, 2022 ஆம் ஆண்டு முதல் ஜூன் 2024 வரை மாநிலம் முழுவதும் 266 மாவட்ட அளவிலான NARCO ஒருங்கிணைப்பு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாநிலம் முழுவதும் தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் விற்பனையை தடுக்க காவல்துறை, உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை அதிகாரிகள் உள்ளடக்கிய 391 குழுக்கள் கடந்த நவம்பர் 2023 இல் உருவாக்கப்பட்டு தீவிர சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதில், கடந்த ஜூலை 2024 வரையில், 19,332 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு சுமார் 177 டன் புகையிலைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி குற்றவாளிகளிட மிருந்து சுமார் 13.16 கோடி ரூபாய் அபராதம் வசூலிக்கப் பட்டதுடன் 8,650 கடைகள் சீல் வைக்கப்பட்டுள்ளது.

**போதைப்பொருள் உற்பத்தி மற்றும் சட்டவிரோத கடத்தலை ஒழிப்பதில் சிறப்பாக பணியாற்றிய காவல் துறையினருக்கு பதக்கங்கள்**

மாநிலத்தில் போதைப்பொருள் உற்பத்தி மற்றும் சட்டவிரோத கடத்தலை ஒழிப்பதில் சிறப்பான பணி யாற்றியதற்காக 2024 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முதலமைச்சர் காவலர் சிறப்பு பதக்கங்களை, தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆர். சிவபிரசாத், இ.கா.ப., அவர்களுக்கும், சேலம், மத்திய புலனாய்வுப் பிரிவு, காவல் ஆய்வாளர் பி. ஜகன்னாதன் அவர்களுக்கும், சென்னை, மத்திய புலனாய்வுப் பிரிவு, சார்ஆய்வாளர் கே.ராஜ்குமார் அவர்களுக்கும், மதுரை மாவட்டம், ஒத்தக்கடை போக்குவரத்து காவல் நிலைய சிறப்பு சார்ஆய்வாளர் ஆர்.அருண் அவர்களுக்கும், இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ்.மங்கலம் காவல் நிலைய முதுநிலை காவலர் ஆர்.துரை அவர்களுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்.

மேலும் இன்று மாநிலம் முழுவதும் கைப்பற்றப்பட்ட சுமார் 13,775 கிலோ போதைப்பொருட்கள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் செங்கல்பட்டு, சேலம், தஞ்சை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தகுந்த பாதுகாப்புடன் எரித்து அழிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ்குமார்,

காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) செள.டேவிட்சன் தேவாசிர்வாதம், சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், அமலாக்கப் பணியகம் குற்றப் புலனாய்வுத் துறை கூடுதல் இயக்குநர் முனைவர் அ.அமல்ராஜ், மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சேலம் ராஜஸ்தான் மாநிலம் நோகார் மாவட்டத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான வாலி பால் போட்டியில் வெற்றிபெற்று. இந்திய அளவில் முதல் இடம்பிடித்த மாணவ, மாணவிகள் சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர் இரா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ. விடம் வாழ்த்துப் பெற்றனர். உடன் மேயர். ஆ.ராமச்சந்திரன், வாலி பால் சங்கத்தின், மாநில செயலாளர் வஸ்தாத், இரா.கிருஷ்ணன், துணைச்செயலாளர் ஆசிப் முகமது, பயிற்சியாளர் ஹேமலதா, மேலாளர் சிராஜுதின் இருந்தனர்.



மயிலாடுதுறை மாவட்டம் மணக்குடி கிராமத்தில் மயிலாடுதுறை புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு வருவதை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் மாவட்ட ஆட்சியர் .ஏ.பி.மகாபாரதி, சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்லம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார், மயிலாடுதுறை நகர்மன்ற செல்வராஜ், மாவட்டக் கழக துணை செயலாளர் முழு ஞானவேல் பொதுக்குழு உறுப்பினர் நத்தம் ஏ.வின்சென்ட், மயிலாடுதுறை கிழக்கு ஒன்றிய செயலாளர் பா. முருகமணி மற்றும் பலர்உள்ளனர்.

## உத்திரமேரூரில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கல்!

*காஞ்சிபுரம், ஆக. 14 -* காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் தொகுதியில் பல்வேறு பள்ளிகளில் பயிலும் 903 பள்ளி மாணவர்கள் அரசின் விலையில்லா மிதிவண்டிகளை நேற்று முன்தினம் மாவட்டச் செயலாளரும் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர் வழங்கினார். இதில் ஒன்றியக் குழுத் தலைவர் ஹேமலதா ஞானசேகரன், ஒன்றிய கழக செயலாளர் கெ.ஞானசேகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தமிழ்நாடு முதலமைச் சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, விலையில்லா மிதிவண்டி கள் வழங்கும் விழா காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் பேரூராட்சியில் உள்ள அரசு மேல்நிலை பள்ளிகளில் நேற்று முன்தினம் (12.8.2024) காலை திங்கள்கிழமை 12.08.24 11.00 மணி முதல் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளரும் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் கலந்து கொண்டு பள்ளி 903 பள்ளி மாணவர்கள் - மாணவிகளுக்கு விலையில்லா மிதி வண்டிகள் வழங்கி, அரசின் திட்டங்களை எடுத்துரைத்து பேசினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 09.08.2024 அன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் தமிழ்ப் புதல்வன் திட்டத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், ஜெய்ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் கீழ் கல்லூரி மாணவர்களுக்கு வங்கி பற்று அட்டைகளை வழங்கினர். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், திருப்பூர் வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், திருப்பூர் சார் ஆட்சியர் செளம்யா ஆனந்த், பொங்கலூர் ஒன்றியக் குழுத்தலைவர் வழக்கறிஞர் எஸ்.குமார், பல்லடம் நகர செயலாளர் நா.ராஜேந்திரகுமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### பல்லுயிர் காக்கும் அரசின் ஒருங்கிணைந்த முயற்சிகளால்

# யானைகளின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது!

## உலக யானைகள் தினத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, ஆக. 14-

பல்லுயிர் காக்கும் நமது அரசின் ஒருங்கிணைந்த முயற்சி களால் யானைகளின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து வருகிறது என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

உலக யானைகள் தினத்தை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**சூழலியற் சமநிலையைப் பேணுவதில் யானைகளின் பங்கு அளப்பரியது.**

**தமிழிலக்கியம் முழுதும் பல்வேறு பெயர்களால் யானைகள் குறிப்பிடப்படுவதில் இருந்தே அவை இம்மண்ணுடன் கொண்டுள்ள நெருக்கமான உறவை உணரலாம்.**

**பல்லுயிர் காக்கும் நமது அரசின் ஒருங்கிணைந்த முயற்சிகளால், நாம் ஆட்சிப் பொறுப்பேற்றதில் இருந்து யானைகளின் எண்ணிக்கை தொடர்ந்து,**

**சீராக உயர்ந்து வரும் மகிழ்ச்சிக்குரிய செய்தியை உலக யானைகள் தினத்தில் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### தூய்மைப் பணியாளரின் மகளான

# துர்கா நகராட்சி ஆணையராக பணி நியமன ஆணை! அவரது பேட்டி கேட்டு அகமகிழ்ந்தேன்!

## கல்விதான் யாராலும் பறிக்க முடியாத சொத்து - முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

**சென்னை, ஆக.14 –**

**தூய்மைப் பணியாளரின் மகளான திருமிகு துர்கா அவர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக நகராட்சி ஆணையாளர் பணியிடத்திற்கு தேர்வு பெற்று பணி நியமன ஆணை பெற்றது தொடர்பாக அளித்த பேட்டி குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:–**

**நகராட்சி ஆணையராகப் பொறுப்பேற்கும் திருமிகு துர்கா அவர்களின் பேட்டியைக் கேட்டு அகமகிழ்ந்தேன்.**

**கல்விதான் ஒரு தலைமுறையையே முன்னேற்றிடும் ஆற்றல் பெற்றது என்பதற்குத் திருமிகு துர்கா அவர்களே எடுத்துக்காட்டு.**

**நான் மீண்டும் சொல்கிறேன்... கல்விதான் யாராலும் பறிக்க முடியாத சொத்து.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# புதுச்சேரி மொழியியல் ஆராய்ச்சி நிறுவனம் மூடுவிழாவை நோக்கி செல்கிறது!

## புதுச்சேரி பேரவையில் இரா.சிவா பேச்சு!

*புதுச்சேரி, ஆக. 14-* புதுச்சேரி மொழியியல் ஆராய்ச்சி நிறுவனம் மூடு விழா நோக்கி சென்று கொண்டிருப்பதை இப் பேரவையின் கவனத்திற்கு கொண்டு வருவது சம்பந்தமாக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா பேசியதாவது: -



புதுச்சரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் 1986-ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. கலை, பண்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும் இந்நிறுவனம், மாநிலத்தில் உள்ள கவிஞர்கள், மானிடவியல், இலக்கியம், பண்பாட்டு தளங்களை ஆய்வு செய்து, ஆவணப்படுத்துவதை முக்கிய இலக்காக கொண்டு செயலாற்றி வருகிறது. அத்துடன் எம்.பில்., பி.எச்.டி., படிப்புகளையும் நடத்தி, ஆய்வாளர்களுக்கு பட்டங்களை வழங்கி வருவதோடு, பிற மாநிலத்திலும் மற்றும் நாட்டினருக்கு தமிழ் கற்பிக்கப்படுகிறது.

இலக்கியம், மொழியியல், பண்பாட்டு இயல் என மூன்று துறைகளை கொண்டுள்ள இந்நிறுவனத்தில் 12 பேராசிரியர்கள் பணியாற்றி வந்தவர். ஆனால் இன்றைக்கு நிறுவனத்தில் ஒரு பேராசிரியர் கூட பணியில் இல்லை. கடந்த இரண்டு ஆண்டுகளாக மொழியியல் பண்பாட்டு நிறுவனத்திற்கு பி.எச்.டி., படிப்பில் ஒரு மாணவர் கூட சேர்க்கப்படவில்லை.

கலை, பண்பாட்டுத் துறை இயக்குநர் பொறுப்பு அடிப்படையில் இந்நிறுவனத்தை கவனித்து வருகிறார். பத்து பேர் இருக்க வேண்டிய அலுவலகத்தில் ஒரு யுடிசி, ஒரு உதவியாளர், ஒரு டேட்டா என்ட்ரி ஆபரேட்டர், ஒரு நூலகர் என நான்கு பேர் மட்டும் பணியாற்றி வருகிறார்கள். மற்றவர்கள் வேறு துறைகளுக்கு மாறிவிட்டனர்.

மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் சொசைட்டியாகத்தான் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே, மத்திய தேர்வாணையம் வரை கோப்பு அனுப்பி காலியிடங்களை நிரப்ப தேவையில்லை. மாநில அரசே முடிவு செய்து, பேராசிரியர் பணியிடங்களை நிரப்பலாம். கடந்த ஆண்டு 9 பேராசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படும் என் இப்பேரவையில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இன்னும் நிரப்பப் படவில்லை.

ஆகவே, புதுச்சேரி அரசு மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தில் உள்ள காலிப்பணியிடங்களை புதுச்சேரியில் தமிழில் எம்.பில்., பி.எச்.டி., முடித்த பட்டதாரிகளை கொண்டு நிரப்பி மீண்டும் அந்நிறுவனத்திற்கு புத்துயிர் அளிக்க வேண்டும் என்று இந்த அவையின் வாயிலாக அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன் என அவர் பேசினார்



விழுப்புரம் மாவட்டம், வளவனூர் பேரூர் 9 வது வார்டு பஞ்சாயத்து குடியிருப்பு, தொட்டி பாட்டை, சுப்பிரமணியர் நகர், ஏரிக்கரை தெரு ஆகிய பகுதிகளில் ரயில்வே துறைக்கு சொந்தமான இடங்களில் கடந்த 100 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வரும் மக்களை ரயில்வே துறையினர் உடனடியாக காலி செய்ய வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர். இதனால் அப்பகுதி மக்களுக்கு மாற்று இடம் வழங்க வேண்டும் என அப்பகுதி கழக பேரூராட்சி மன்ற உறுப்பினர் சிவசங்கரி அன்பரசு தலைமையில் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி அவர்களிடம் கோரிக்கை மனுவை அளித்தனர். மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா ஜனகராஜ், பேரூர் செயலாளர் பா.ஜீவா, பொதுக்குழு உறுப்பினர் டி.என்.ஜெ.சம்பத், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ப.அன்பரசு உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதல்வர் திராவிடநாயகர் தளபதி அவர்கள் போதைப்பொருள் இல்லாத தமிழ்நாடு குறித்த விழிப்புணர்வு உறுதிமொழியை காணொலி வாயிலாக வாசிக்க திருவாரூரில் வ.சோ.ஆண்கள் மேல் நிலைப்பள்ளியில் மாணவர்களும், சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன், நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ, மாவட்டக் கண்காணிப்பாளர் ஜெயக்குமார், மாவட்ட ஊராட்சி தலைவர் கரையாமங்கலம் ஜி. பாலு, ஒன்றிய குழு பெருந்தலைவர் புலிவலம் ஏ.தேவா, நகர் மன்றத் தலைவர் புவனப்பிரியா, துணைத்தலைவர் அகிலா, திட்டக் குழு உறுப்பினர் இரா.சங்கர், ஆசிரியர்கள் உள்ளிட்டோர் போதைப்பொருட்களுக்கு எதிரான உறுதிமொழியை எடுத்துக்கொண்டனர்.